தமிழ்நாடு, கேரளாவில் தென்மேற்குப் பருவமழை!

3 நாளில் தொடங்கும்!

சென்னை, ஜூன் 2-

தமிழகம், கேரளாவில் தென்மேற்குப் பருவமழை 3 நாட்களில் தொடங்கக்கூடும். இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தென்மேற்குப் பருவமழை அடுத்த 3 நாட்களில் அரபிக் கடல், வங்கக்கடல், லட்சத்தீவுகள், கேரளா, தமிழகத்தின் சில பகுதிகளுக்கு முன்னேறும் வகையில் நிலைமை சாதகமாக உள்ளது. அதனால், தமிழகம், கேரளாவில் தென்மேற்குப் பருவமழை அடுத்த 3 நாட்களில் தொடங்க வாய்ப்பு உள்ளது.

தென்கிழக்கு அரபிக்கடல், அதை ஒட்டிய தெற்கு கேரளப் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஒருசில இடங்களில் (ஜூன் 1) முதல் 6ம் தேதி வரை இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். குறிப்பாக, இன்று நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, கரூர், நாமக்கல், ஈரோடு, சேலம், திருச்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகரிக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் லேசான மழை பெய்யும்.

வெப்பநிலை 86 டிகிரி முதல் 104 டிகிரி ஃபாரன்ஹீட் வரை இருக்கக்கூடும். தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் இன்று முதல் 4ம் தேதி வரை மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் சூறாவளிக் காற்று வீசக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தூத்துக்குடி வருகை தந்த நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் - கழகத் துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்களை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

பாலியல் – பெண் கொடுமை தாண்டவமாடுகிறது! த.வெ.க. ஆட்சியில்

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு காற்றில் பறக்கிறது!

முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்த நாள் – திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் நல உதவிகள்- அறுசுவை உணவு- கழகக் கொடி ஏற்றி - இனிப்பு வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவீர்!

மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜூன், 2

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை நலத்திட்ட உதவிகள், அறுசுவை உணவு, கழகக் கொடி ஏற்றி, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடுவதுடன், நாளை காலை மாவட்டக் கழகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது என்று மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

தமிழ்நாட்டினை வடித்தெடுத்த நவீன சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாள் (ஜூன் 3) நாளை!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தீட்டிய திட்டங்கள் ஒன்றா இரண்டா? கைரிக்ஷா ஒழிப்பு, இரவலர் மறு வாழ்வு, கண்ணொளி வழங்கும் திட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, மகளிர் சுய உதவிக் குழுக்கள், திருமண நிதி உதவி, கருவுற்ற பெண்களுக்கு நிதி உதவித் திட்டம், அரசு வேலை வாய்ப்பில்,

உள்ளாட்சியில் இட ஒதுக்கீடு.

கலைஞர் மருத்துக் காப்பீடு, இலவச கலர் டி.வி. உயர் கல்வி வரை இலவச கல்வி, மருத்துவம் பெறியியல் படிப்புகளுக்கு நுழைவுத் தேர்வு ரத்து, அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம், மூலை முடிக் கெல்லாம், திரும்பிய பக்கமெல்லாம் தொழிற்சாலைகள், பாலங்கள், சாலை வசதிகள் என்று இப்படி அடிக்கிக் கொண்டே போகலாம் கலைஞர் தீட்டிய தீட்டங்களை. இன்றைக்கு தமிழ்நாடு இந்தியாவே, ஏன் உலகமே திரும்பிப்பார்க்கிறது என்றால் அதற்கு அடிப்படை காரணம் முத்தமிழறிஞர் கலைஞர்அவர்கள் அல்லவா?

திராவிட இயக்க பெருந்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழகத்தினருக்கு எழுதிய உங்களில் ஒருவன் கடிதத்தில்,

"நம் உயிர் நிகர் தலைவர் கலைஞரின் 103 வது பிறந்த நாளான வரும் ஜூன் 3 ஆம் நாள். தமிழ்நாடு முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளைச் சிறப்பாக கொண்டாடுவோம். அனைத்து இடங்களிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்துவோம். கழகக் கிளைகள் எங்கும் கருப்பு-சிவப்பு இருவண்ணக் கொடி உயர்ந்து பறக்கட்டும். நலிந்தோருக்கும்- ஏழைகளுக்கும் உதவி செய்யும் நிகழ்வுகள் நடக்கட்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அதன் படி கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, திராவிட இயக்கப் பெருந்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 ஆம் தேதி அன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் ஏழை எளிய மக்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து, ஆங்காங்கே அறுசுவை உணவு, கருப்பு-சிவப்பு இருவண்ணக் கொடி ஏற்றி, பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி, நமது மாவட்டம் எங்குமுள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதுடன் அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி வணங்கி, ஆங்காங்கே இனிப்பு வழங்கி கலைஞர் அவர்களின் புகழ் பாடிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருகரத்தால் நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக அலுவலமான கலைஞர் பவள விழா மாளிகை திறந்து வைக்கப்பட்டதாகும். அப்பேற்பட்ட நம் மாவட்டக் கழக அலுவலகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு என் (மாவட்டச் செயலாளர் க.சுந்தர்) தலைமையில் நாளை (3.6.2026-புதன்கிழமை) காலை 8 மணிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

எனவே இந்நிகழ்ச்சிகளில் காஞ்சிபுரம் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், ஒன்றியக் கழக, நகரக் கழக பேரூர் கழக நிர்வாகிகள், வட்டக் கழக - கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்பட கழக முன்னணியினர், தோழர்கள் அனைவரும் கலைஞர் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கலைஞர் புகழை மேலும் ஓங்கச் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற கழக வர்த்தகர் அணி கூட்டத்தில் கடும் கண்டனம்!

சென்னை, ஜூன் 2-

கழக வர்த்தக அணி நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டம் 31.05.2026 ஞாயிற்றுக்கிழமை காலை, கழக அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில், கழக வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.

கழக நிர்வாகிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1. நம்மை வளர்த்து ஆளாக்கிய, எட்டு கோடி தமிழர்களின் எட்டாவது அதிசயம், திருக்குவளை என்னும் கிராமத்தில் 1924 ஜூன் 3ல் முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாய் பிறந்தவர்.

பெருமைமிகு தலைவர் கலைஞர்!

பெண்களுக்கு சொத்துரிமை கேட்டதை, தீர்மானமாக தந்த பெரியாரின் எண்ணங்களுக்கு வடிவம் தந்தவர், கைரிக்ஷாவை ஒழித்தவர் சமத்துவபுரம் கண்டவர் தொழுநோயினை விரட்டியவர் முட்டையுடன் கூடிய சத்துணவு தந்தவர்.

பலமுனை வரியை ஒழித்தவர் வணிகர்களின் நலன் காக்க "வணிகர் நல வாரியம் தந்தவர்" கல்வியில், வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீட்டை அதிகரித்தவர், கண்ணொளி திட்டம் தந்தவர், தமிழுக்கு "செம்மொழி" தகுதி பெற்று தந்தவர்.

வள்ளுவனுக்கு கன்னியாகுமரி கடல் நடுவில் திருவள்ளுவர் சிலையை வடிவமைத்தவர். அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் வாய்ப்பு, டைட்டில் பார்க் தொழில் புரட்சி செய்தவர்.

உழவர் சந்தை, பெண்கள் சுய உதவி குழு என வரலாறு படைத்த, மறு பெரியாராம் கலைஞரை போற்றிடும் வகையில், நமது கழகத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த நாளான ஜூன் 3ல் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்கமோதிரம் மற்றும் அந்த வாரத்தில் அசைவ உணவு இனிப்பு வழங்குதல் கழக கொடி ஏற்றுதல் என்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கொலை – கொள்ளை தடுக்கப்பட வேண்டும்!

2. கரூர் சம்பவத்திற்கும், கொடநாடு கொலைக்கும் காரணமானவர்கள் எவ்வளவு உயரத்தில் இருந்தாலும், ஒன்றிய அரசின் வழக்கு தீவிர படுத்த வேண்டும். குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும்.

3. தமிழ்நாட்டின் மோடியாக வாழ்ந்து வரும் முதல்வர் விஜய், நிருபர்களின் கேள்விகளை சந்தித்து பதில் வழங்க வேண்டும்.

செய்தியை, செய்தியாளர்களை புறக்கணித்தால் தமிழக வெற்றிக்கழக ஆட்சி இன்னும் மூன்று மாதம் கூட நீடிக்காது என தெரியமாக கருத்துப்படம் வெளியிட்ட "மாலை முரசு" நாளிதழுக்கும் ஆசிரியருக்கும் இந்த அவை நன்றி கூறுகிறது.

4. அற்ற குளத்து அறுநீர் பறவையாய், விளம்பரத்துக்காக தன்னை மாற்றிக் கொள்ளாமல், தொடர்ந்து தி.மு.க.வையும், எங்கள் நெஞ்சத்தில் தங்க சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கும் தளபதியையும் தாங்கி செய்தி வெளியிடும் "தினகரன்" நாளிதழையும் வாழ்த்துகிறோம்.

காவி விசுவநாதனுக்கு கடும் கண்டனம்!

5. பல்கலைக்கழக வேந்தராக தமிழக முதல்வர் இருக்க வேண்டிய அவசியம் இல்லை கவர்னரே இருக்கலாம் என்று சொன்ன கதர்காவி விஸ்வநாதனுக்கு எங்கள் கண்டனம். கவர்னர் ஆட்சி கூடாது என்பதற்காகத்தான் ஆதரவு தருகிறோம் என கூறி விட்டு, கவர்னருக்கு அதிகாரத்தை கொடுக்கும் இரட்டை வேட கபடதாரி காங்கிரசை கண்டிக்கிறோம்.

6. முயலுக்கு ஆசைப்பட்டு சிங்கத்தை கோட்டை விட்டது போல, இரண்டு மாநில அமைச்சருக்காக இந்தியா முழுவதும் காவி எதிர்ப்பு பேசி வந்த, தி.மு.க.வை கைவிட்ட ராகுலை இந்த மாமன்றம் வன்மையாக கண்டிக்கிறது.

7. கேரளாவில் பதவியேற்பு விழாவில் பங்கேற்காத விஜய், புதுடெல்லி வரை சென்று பிரதமரை பார்த்து விட்டு, சோனியா, ராகுலை பார்க்காமல் வந்ததற்கு பிறகு, வேண்டா விருந்தாளியாக தூணை பிடித்துக்கொண்டு, எச்சில் சோறுக்கு நிற்கின்ற ராகுல், இந்த அவமானத்தை மனதில் கொண்டு, தங்கள் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்து விட்டு வெளியே வந்து, காங்கிரஸிற்கு இருக்கும் கொஞ்ச நஞ்ச மரியாதையையாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

உதயநிதிக்கு பாராட்டு!

8. சட்டமன்றத்தில் சுவையாகவும், ஆழமாகவும், வீரமாகவும் பேசிய எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை இந்த மாமன்றம் பாராட்டுகிறது.

9. உலக வரலாற்றிலேயே ஒரு தலைவன் தோற்பதும், அந்த தலைவன் நன்றி சொல்லப் போனால் ஊரே அழுவதுமான சாதனையை செய்த சரித்திர நாயகனின், வெற்றி இழப்பிற்காக எங்கள் கண்ணீரையும் காணிக்கையாக்குகிறோம்.

10. அரண்மனை கதவை உடைக்கத்தான் நேரம் ஆகும். உடைத்தபின் வரிசையாக படை உள்ளே செல்லும் என்பது போல, முதன் முதலில் 1,000/ ரூபாய் கொடுப்பதுதான் சிரமம். உடைத்த வீட்டில் வரிசையாக செல்லலாம் என்பது போல,

த.வெ.க. கொடுத்த வாக்குறுதி என்னானது?

முதலில் மாதம் 1,000/ ரூபாய் கொடுப்பதுதான் சிரமம். ஆனால் கொடுத்த பின் 2,500/ ரூபாய் கொடுப்பது சுலபம். அதைக் கூட கொடுக்காமல் இழுத்தடிப்பதும், விடியல் பயணத்தை விரிவுபடுத்தி தமிழகம் முழுவதும் பெண்கள் இலவச பேருந்து திட்டம் என கூறியது தற்போது என்ன ஆனது? வேலையில்லா பட்டதாரிகளுக்கு மாதம் 4,000/ என கூறியது என்ன ஆனது? ஆண்டிற்கு ஆறு சிலிண்டர் என்ன ஆனது? கொடுத்த வாக்குறுதியில் ஒன்றையாவது நிறைவேற்றி தந்திட முதல்வர் விஜய்யினை கேட்டுக்கொள்கிறோம்.

வெறும் பேச்சு விஜயை வன்மையாகக் கண்டிக்கிறோம்!

11. அ.தி.மு.க. தலைவர் எடப்பாடி பழனிச்சாமியை, பெருந்தன்மையாக அதே வீட்டில் குடி வைத்த அன்றைய முதல்வர் எங்கள் சாதனையின் சிகரம் தளபதியை பாராட்டுவதுடன், பெருந்தன்மையின்றி இன்று எதிர்க்கட்சி என்பதற்காக எடப்பாடி பழனிச்சாமியை, அரசு தந்த வீட்டை விட்டு வெளியேற்றிய கொடுமைக்கார விஜய்க்கு எங்கள் கண்டனத்தை தெரிவிக்கிறோம்.

12. பிறந்த குழந்தைகளுக்கு மோதிரம் என கூறினீர்களே மோதிரம் எங்கே? நடக்கும் கல்யாணங்களுக்கும் தாலிக்கு தங்கம் எங்கே? அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு 15,000/ ரூபாய் எங்கே? முதியோர் உதவித் தொகை 3,000/ ரூபாய் எங்கே? வாக்குறுதி என வீச்சு வீச்சு என கத்திய விஜயை இம்மாமன்றம் கண்டிக்கின்றது.

இளைஞர்களின் அடையாளம் நம் தளபதி!

13. ஒன்றிய அரசு ஜனவரி மாதம், தேசிய கீதம் பாடும் நிகழ்வில் அதற்கு முன்பாக "வந்தே மாதரம்" பாட வேண்டும் என்று சொல்லி உள்ளது.

ஆனால் தமிழகத்தில் முதல் பாட்டு "தமிழ்த்தாய் வாழ்த்து" பாட்டு என்பதற்கு எந்த தடையும் இல்லாததால், கடந்த ஜனவரி முதல் மே மாதம் வரை எந்த ஒரு விழாவிலும் தமிழை புறந்தள்ளாமல் முதல் பாட்டாக பாடிய தமிழக அன்றைய முதல்வர், இளைஞர்களின் அடையாளம் தளபதியை பாராட்டுவதுடன், அதை கண்டுகொள்ளாது பிரதமரிடம் சென்று கோரிக்கை வைக்கும் கோமாளி விஜயை கண்டிக்கின்றோம்.

14. ஜூன் 1 முதல் 600க்கும் மேற்பட்ட சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வை அமல்படுத்தும் ஒன்றிய அரசால் பொருளாதாரம் தாக்கப்படும், விலைவாசி ஏறும், ஆதலால் டோல்கேட் கட்டண உயர்வை ரத்து செய்திட ஒன்றிய அரசை வேண்டுகிறோம்.

லாட்டரி குடும்பத்தின் குதிரைபேர அரசியல்!

15. வணிகர்களின் வாழ்வாதாரத்தை சிதைக்கும் ஜி.எஸ்.டி. வரிவிதிப்பை மாற்றி, மாநில அரசுக்கே அந்த அதிகாரத்தை கொடுக்கும் வகையில் ஒன்றையாவது நிறைவேற்றி தந்திட முதல்வர் விஜய்யினை கேட்டுக்கொள்கிறோம்.

16. தமிழகத்திற்கு விடுவிக்கப்பட வேண்டிய நிதியை ஒன்றிய அரசு உடனடியாக விடுவிக்க வேண்டுகிறோம்.

17. குதிரைப்பந்தயம், லாட்டரியை ஒழித்த தமிழ்நாட்டில், லாட்டரி குடும்பத்தை நுழைய வைத்த தோடு, குதிரைப்பேரம் நடத்தும் விஜய்யினை கண்டிக்கிறோம். ஓ.பி.எஸ், மனோஜ்பாண்டியன், கம்பம் ராமகிருஷ்ணன், அனிதா ராதாகிருஷ்ணன் தோற்றதெடுக்கப்பட்ட மூன்றாண்டுகள் கழித்துதான் மாற்று முடிவு எடுத்தார்கள். கொறடா பேச்சை மீறி வாக்களிக்க வில்லை. குதிரைப்பேரம் என்பது தமிழக வரலாற்றில் இப்போதுதான் நடக்கிறது. வேறு உதாரணங்களை கொடுத்து சமாதானப்படுத்த வேண்டாம். குதிரைப்பேரத்தை கண்டிக்கிறோம்.

18. வங்கத்தில் வன்முறை செய்யும் பா.ஜ.க.வினர், வங்கத்தின் முன்னாள் மாநில முதல்வர் மம்தா பானர்ஜியின் மருமகன் அபிஷேக் மீது கருத்துப்போர் நடத்தாமல், கற்களையும், முட்டையையும் வீசி ஜனநாயகத்தை கேலிசெய்கிறார்கள். இம்மாமன்றம் வன்முறை தூண்டும் பா.ஜ.க.வினை வன்மையாக கண்டிக்கின்றது.

19. பாலியல் பெண்கொடுமை தாண்டவமாடும் தமிழ்நாட்டில், சட்டம் ஒழுங்கை காற்றில் பறக்க விட்ட முதல்வர் விஜய்யை இம்மாமன்றம் வன்மையாக கண்டிக்கின்றது.

வள்ளுவருக்கு பெரும் புகழ் சேர்த்த கலைஞர்!

20. எச்சிலை காணாத கற்சிலை, அது எச்சிலை, அச்சிலை கன்னியாகுமரியில் இருக்கும் கலைஞரால் உருவாக்கப்பட்ட என் ஐயன் வள்ளுவர் சிலை. மற்றவர்கள் எழுப்புகின்ற சிலைகளில் எல்லாம் காகம் உட்காரும். என் தலைவன் கலைஞர் வள்ளுவனுக்கு குமரியில் நிறுத்திய சிலையில் மட்டுமே மேகம் உட்காரும். அந்த வள்ளுவனுக்கு எந்த சாயமும் பூசாமல் புகழ் சூட்டினார் கலைஞர்.

குறளோவியம், வள்ளுவர் கோட்டம் என வரிசையாக கலைஞரால் புகழ் பாடப்பட்ட அந்த வள்ளுவனுக்கு காவிச்சாயம் பூசி, வள்ளுவனின் கண்ணியத்தை குறைத்த, தமிழ் பூமிக்கு புண்ணியமில்லாத காவிகளை வன்மையாக கண்டிக்கிறோம்.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் கழக வர்த்தகர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கழக வர்த்தகர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் அணியின் செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் மதுரை தனசெல்வன், சென்னை மோகன், வி.பி.மணி, பி.டி.பாண்டிச் செல்வம், கன்னியாகுமரி தாமரை பாரதி, மீஞ்சூர் பாஸ்கர் சுந்தரம், காஞ்சி வி.எஸ். ராமகிருஷ்ணன், மாவட்ட நிர்வாகிகள் கோவை வேலுச்சாமி, அரியலூர் செல்வராஜ், மயிலை பாலு, புதுக்கோட்டை முத்து, காஞ்சிபுரம் மார்த்தாண்டன், பவானி சுப்பிரமணியன் உள்ளிட்ட நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

களக்காடி எல்லப்பன் தலைமையில் எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில்

ஜாபர்கான்பேட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, ஜூன்.2

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்த நாளை முன்னிட்டு, சைதை, ஜாபர்கான் பேட்டை, 139 வது வட்டம், கெங்கையம்மன் கோவில் அருகில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நாளை 3.6.2026 -புதன்கிழமை அன்று காலை 7 மணிக்கு நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமை வகிக்கிறார். பகுதிக் கழகச் செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி, அட்கோ கமலாநாதன், சை.மு. சேகர் ஆகியோர் முன்னிலையில் மாவட்டக் கழகச் செயலாளர்-முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்குகிறார்.

இந்த நிகழ்ச்சியில் மு. மகேஷ்குமார், எஸ்.குணசேகரன், மா.அன்பரசன், எம்.ஸ்ரீதரன், மின்னல் கந்தப்பன், ப.சுப்பிரமணி, எம்.எஸ்.ஹரிபாபு, டி.என். சிவமணி, சைதை த.சம்பத், வி.பி.ஜானகிராமன், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், சைதை சாதிக், ந.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா, நா.மணிகண்டன், ஆர். கிருஷ்ணகுமார், நரேஷ் குமார், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், த. மணி, மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ். முருகன், அ.அயாத்பாஷா, சாந்தி சுந்தரம், இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், பூபதி வெங்கடேசன், சுமதி தீனதயாளன், எல்.சந்திரன், சி.டி.காசிநாதன், து.முரளி, வி.சுபரி, அ. சுப்பிரமணி, து.கொடிசுரேஷ், டி.கோபால கிருஷ்ணன், எஸ்.முகமது அலி, ஜி.ஏழுமலை, யமஹா ராஜேஷ், ஜிம்.பிரபு, ம.திலீப்பன், க. ரஞ்சித் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். பாபு எல்லப்பன் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் செய்துள்ளார்.

தலைமை மாவட்ட பிரதிநிதி தென்றல் வி.விஜய் ! 171 அ வட்ட தி.மு.க. சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள்: 500 பேருக்கு உணவு!

மயிலை த. வேலு– எஸ். முரளி – பொன்னுசாமி - கீதா முரளி வழங்குகின்றனர்!

சென்னை,ஜூன்.2-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 171 அ வட்ட திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் முன்னிட்டு நாளை (3.06.2026 புதன்கிழமை), 12 மணியளவில் ஆர்.கே. மட் ரோடு ஆட்டோ நிறுத்தம் அருகில் மாவட்ட பிரதிநிதி தென்றல் வி. விஜய் தலைமையில் கழகக் கொடியேற்றி 500 பேருக்கு உணவை மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு, மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி, வட்டச் செயலாளர் பா. பொன்னுசாமி, கீதா முரளி எம்.சி. ஆகியோர் வழங்குகின்றனர்.

இதில் மிள்ளல் என்.செல்வம் ,ப.சுரேஷ் ,ப.கார்த்திக், பி.சந்தோஷ் ,எம்.விக்கி, ஆர். விஜய் ,ஜி.கே.நரசிம்மன், இ.உதயா, லாக் தினேஷ் ஞானபிரகாசம், ப.வைதி, எஸ்.கௌதம், எம்.மணி, எம். மணிகண்டன், பி.ஆகாஷ், இதில் கலைசேகர், மயிலை செல்வம், டி.சந்திரசேகரன், L.தட்சிணாமூர்த்தி, கே.பி. ரமேஷ், அ.சிவகாமி, வி. மூர்த்தி, பி.முனுசாமி, என். ரவி, ஆர்.சீனிவாசன், என். குணசேகரன், பா.கார்த்திக், தஞ்சை என்.கணேஷ், மின்னல் என்.செல்வம், ஆட்டோ யு.சுரேஷ், மயிலை பி.சந்தோஷ் , ஆர்.விஜய், எச். விக்கி ,ஆட்டோ சிவா, எம். மணி, எச்.மணிகண்டன், வீர மணி (ஏ) காசி, ஜி.கே.நரசிம்மன், லாக் ஞானபிரகாசம், லாக் இளங்கோ, லாக் வி. நந்தா, லாக் வி.நந்தா,. ,பி. ஆகாஷ், சாஸ்தா எஸ்.குமார், ஸ்டார் குமார், காசி, பஞ்சர் முருகன், மனோகர், கார்த்திக், வைதி, இ.உதயா, அஜித், நந்தா, முரளி, ஹரிஷ், லாக் நரசிம்மன், தினேஷ், பிரகாஷ், நந்தா, இளங்கோ, லாக் மூர்த்தி, பட்டினம் பாக்கம் வீரமணி, காசி, தட்சிணாமூர்த்தி, ஆர்.விஜயகுமார், எஸ்.கௌதம் மணி, என். செல்வம், யு.சுரேஷ், மயிலை ஆர்.சிவன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.